தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**18 - 22 வயதுப்பிரிவு**
(01.01.2000 – 31.12.2004 வரையில் பிறந்தோர்)

## தடை உடைத்துத் தடம் பதித்தோர்

எங்களிடமிருந்து வன்பறிப்புச் செய்யப்பட்ட எமது தேசத்தையும் எங்களுக்கு மறுக்கப்படுகின்ற தன்னாட்சி உரிமையையும் அடைவதற்காக வீறுகொண்டு களமாடி வீரச்சாவை அணைத்துக் கொண்டவர்கள் மாவீரர்கள். எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் பல திருப்பங்களையும் பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நிமிர, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் தீர்க்கமான மதிநுட்பம் மிக்க வழிநடத்தல்களைச் செயலாக்கிய வீரமறவர்கள் அவர்களே! தமிழீழ மக்களின் விடுதலை வேட்கை அணைந்துவிடாமல் இருப்பதற்கு அவர்களின் அர்ப்பணிப்புகளும் தியாகங்களுமே அடித்தளமாக விளங்குகின்றன.

வேவுப்புலிகளாக, கரும்புலிகளாக, முன்னரங்கப் படையணிகளாக மண்ணிலும் விண்ணிலும் கடலிலும் பகைவரின் இரும்புக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்து போராட்டத்தை முன் நகர்த்திய காவிய நாயகர்கள் அவர்கள். எமது விடுதலைப் போராட்டம் சந்தித்த மாபெரும் போரியல் வெற்றிகள், திருப்புமுனைகள், போராட்டத்தின் மைல் கற்களாய் அமைந்த அத்தனை வெற்றிகளுக்குப் பின்னும் உறங்கா விழிகளோடு விழித்திருந்து ஈகம் நிறைந்த பணி செய்த எங்கள் வேவுப்புலிகளின் மதிநுட்பம் கண்டு நாம் வியந்து நிற்கிறோம். நிலவில்லா வானத்தில் விண்மீன்களின் ஒளியில் பகைவீட்டுக்குள் நுழைந்துவிடுவது என்பது அத்தனை இலகுவான விடயமல்ல. ஆனாலும், அத்தனை கடினங்களையும் தாங்கி, காடும் மேடும் கடந்து நடந்தார்கள். எதிரியின் முட்கம்பிச் சுருள்களுக்குள் புகுந்து, கண்ணிவெடி வயல்களுக்குள் தப்பி, கொட்டும் மழைக்குள்ளும் கொளுத்தும் வெயிலுக்குள்ளும் மனவுறுதியோடும் ஓர்மத்தோடும் தடைகளை உடைத்து தமிழீழ விடுதலைப் போராட்டம் கண்ட வெற்றிகளுக்கு அத்திவாரமான மறவர்கள் அவர்கள்.

இந்தியப் படையினர் தமிழீழ மண்ணில் கால்பதித்து, தமிழினத்துக்குச் செய்த அநீதியை எதிர்த்து, அவர்களின் முகத்திரையைக் கிழித்து, போராட்டத்தின் தடையுடைக்க உண்ணா நோன்பிருந்து உயிர்க்கொடை செய்த தியாகதீபம் லெப்டினனட் கேணல் திலீபன், விடுதலைக்கான கடற்பயணத்தின்போது இலங்கை - இந்தியக் கூட்டுப்படை சதி நடவடிக்கையால் கைதாகிப் பலாலிப் படைமுகாமில் மானத்தமிழர் வீரம் காத்த லெப்டினனட் கேணல் புலேந்திரன், லெப்டினனட் கேணல் குமரப்பா உள்ளிட்ட பன்னிரு வேங்கைகள், முதலாவது பெண் மாவீரராகக் களப்பலியான இரண்டாம் லெப்டினனட் மாலதி, தேசத்தின் தாயாகத் தன்னை ஒப்புவித்த நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி, வெளிநாடு ஒன்றிலிருந்து வங்கக்கடல் ஊடாக வந்தவேளை இந்தியப் படைகள் வழிமறித்தபோது அடிபணியாது தாம் பயணித்த கப்பலை வெடிவைத்துத் தகர்த்து தடையுடைத்த தளபதி கேணல் கிட்டு உள்ளிட்ட 10 வேங்கைகள் என தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு வழிகளில் திருப்புமுனைகளாகச் செயற்பட்ட அனைத்து மாவீரர்களும் எங்கள் போராட்ட வரலாற்றின் தடையகற்றிகளே!

‘எம் தேசத்திற்காய் எங்கெங்கும்’ என்ற கொள்கை முழக்கத்துடன் இன்றும் வெளித்தெரியாதிருக்கும் தற்கொடையாளர்கள், ஒருபோதும் கைப்பற்ற முடியாதெனக் கூறப்பட்ட ஆனையிறவைக் கைப்பற்றத் தடையுடைத்த தேசப்புயல்கள், அதிவிரைவுக் கலங்களான டோறாக்களை உடைத்தெறிந்தோர், எதிரியின் றாடார்களின் கண்ணில் மண்ணைத்தூவிப் பறந்துசென்று அவர்களின் வான்தளத்தில் குண்டு மழை பொழிந்த வான்கரும்புலிகள் என்று இவர்கள் எல்லோரும் எமது போராட்டம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட போதெல்லாம் அதன் தடைகளை அகற்றி பெரும் திருப்புமுனைகளை ஏற்படுத்தித் தந்த கரும்புலிகள். துவண்டுகிடந்த தமிழினத்தின் தலைவிதியை மாற்ற எங்கள் தலைவர் மாமாவின் உள்ளத்தில் உதித்த புதிய போரியல் பரிமாணம் இவர்கள். பலவீனமாக இருந்த எம் இனத்தின் மிகவும் பலம் பொருந்திய ஆயுதமாக, நவீன தொழில்நுட்பங்களால் உருப்பெற்ற ஆயுத பலத்தை ஆன்ம பலத்தால் உடைத்தெறியும் வல்லமை பொருந்திய உயிராயுதங்களாக, எதிரியின் முற்றத்தில் வெடித்து எம் தேசத்தின் முன் வந்த தடைகளைத் தகர்த்தெறிந்தவர்கள்.

சுதந்திரம் என்பது ஒரு வியாபாரப் பண்டம் அல்ல. அது இரத்தம் சிந்தி போராடிப் பெறப்படும் ஒரு புனிதமான உரிமை. எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலை நோக்கிய பயணத்தைத் தொடர வேண்டும். எமது மக்கள் சிந்திய இரத்தமும் எமது மாவீரர் புரிந்த தியாகமும் வீண்போகாதிருக்க நாம் உறுதி தளராது போராடுவோம். எமது இலட்சியப் பயணத்தில் எத்தனையோ சவால்களை, ஆபத்துகளை, நெருக்கடிகளை நாம் சந்தித்துவிட்டோம். இன்றிருக்கும் பொருளாதார சூழலோ அரசியல் சூழ்ச்சிகளோ எம் இலட்சியத்தைத் தடம் புரட்டாது. எச்சூழலும் எவரும் எம்மை ஒருபோதும் அச்சுறுத்த முடியாது. வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கிறது. சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கிறது.

தோற்றுப் போனவர்கள் எல்லோரும் இலட்சியத்தைக் கைவிட்டுத் துவண்டு போயிருந்தால், நேற்றோடு முடிந்து போயிருக்கும் நிமிர்ந்து நிற்கின்றவர் வரலாறு. நாங்கள் வெல்லப்போகின்ற காலம் வேண்டுமானால் தள்ளிப் போகலாம். ஆனால், எங்கள் வெற்றியை எவராலும் தடுத்துவிட முடியாது. மாவீரர் நினைவுகளை மனதில் நிறுத்தி வைப்போம். தடைகளை எதிர்கொண்டு தடம் பதிப்போம்.

நன்றி,
வணக்கம்.